பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 17 (30—3—58) சனி ★ வெளியூர்: பங்குனி 18 (31—3—68) ஞாயிறு [இதழ்: 240

புரளிக்கு அண்ணா மறுப்பு

'கவர்னர் தலையிட்டுப் பாதுகாப்பு அளித்தார் என்பது தவறு'

'பாதுகாப்புக்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன'

'பீதியும் கவலையும் கொள்ளத் தேவையில்லை'

மாணவர் சமுதாயத்துக்கு அரசின் சார்பில் உறுதிமொழி

சென்னை, மார்ச் 28—

பஸ் தொழிலாளர்—மாணவர் மோதலையொட்டி, இந்த அரசு மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க மறுத்து விட்டதாகவும், ஆளுநர் தலையிட்டுப் பாதுகாப்பு அளித்தார் என்றும் கிளப்பிவிடப்பட்டுள்ள புரளியை இன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக மறுத்து, விளக்கமளித்தார்.

அவையின் 82-வது விதியின்கீழ், கடந்த மார்ச் 25, 26-ஆம் நாட்களில் நகரில் நடந்த சம்பவங்கள் குறித்து விளக்க அறிக்கை ஒன்றை அண்ணா அவர்கள் இன்று சட்டமன்றத்தில் அளித்தார். அதில் அண்ணா அவர்கள், மேற்சொன்ன புரளி பற்றிக் குறிப்பிட்டு விளக்கியதாவது:—

"மாணவர்களுக்கு இந்த அரசு பாதுகாப்பளிக்கவில்லை என்றும், கவர்னர் தலையிட்டுப் பாதுகாப்பளித்தார் என்பதும் முற்றிலும் தவறானதாகும்.

போலீசு ஐ.ஜி.-யோ, போலீசுக் கமிஷனரோ கவர்னரிடமிருந்து எவ்விதத் தகவலையும் பெறவில்லை.

நான் நேற்று மாலை கவர்னரிடம் பேசினேன்; 'நான் போலீசுக்கு எவ்விதக் கட்டளையும் பிறப்பிக்கவில்லை' என்று அவரே கூறினார்.

மாணவர்கள், கவர்னரின் தனிச் செயலாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாதுகாப்புக் கேட்டதாகவும், கவர்னரின் செயலாளர், போலீசுக் கமிஷனரிடம் தொலைபேசியில் தொடர்புகொள்ள முனைந்தபோது, போலீசு கமிஷனர் மருத்துவக் கல்லூரி விடுதிமுன் ஏற்கனவே பாதுகாப்பைக் கவனித்துக் கொண்டிருப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும், அதற்குமேல் அவரோ, கவர்னரோ போலீசுக்கு எவ்விதத் தகவலும் கொடுக்கவில்லை என்றும் கவர்னர்மூலமே நான் அறிந்தேன்.

மாணவப் பிரதிநிதிகள் சிலர் தம்மைச் சந்தித்ததாகவும், அவர்களிடம், 'முதலமைச்சரே இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளக்கூடியவர்' என்று தாம் சொன்னதாகக் கவர்னர் என்னிடம் தெரிவித்தார்.

எனவே, 'கவர்னர் தலையிட்டுத்தான் மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தார் என்பது தவறு."

மாணவச் சமுதாயத்துக்கு உறுதிமொழி

'மாணவர்கள் தாக்கப்படக் கூடும்' என்றும், 'போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்' என்றும் எதிர்க் கட்சித் தலைவர் கூறியதையடுத்து அண்ணா அவர்கள் தெரிவித்ததாவது:—

"மாணவர்களின் பாதுகாப்புக்கான எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

காலையிலும் மாலையிலும், தொலைபேசி மூலம் எல்லா மாணவர் விடுதிகளுடனும் தொடர்பு கொண்டு, நிலைமையைக் கேட்டறிந்து போதிய போலீசுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் நகர் முழுவதிலும் ரோந்துப் போலீசுப் படை சுற்றிக்கொண்டு வருகிறது.

மாணவர்கள், 'நாம் தாக்கப்படுவோமோ' என்ற கவலையோ பீதியோ இன்றி விடுதியில் வாழ எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துக்கொண்டுள்ளது; மேலும் தேவையான எல்லாவிதப் பாதுகாப்புக்களையும் அளிக்கும் என்ற உறுதிமொழியினை மாணவச் சமுதாயத்துக்கு இந்த அரசு அளிக்கிறது."

நீதி விசாரணை

நீதிபதி சோமசுந்தரம் நியமனம்

சென்னை, மார்ச் 29—

"அண்மையில் நடைபெற்ற பஸ் தொழிலாளர்—மாணவர் மோதல் பற்றி நீதி விசாரணை செய்ய நீதிபதி பி. எஸ். சோமசுந்தரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்"

என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு நீதி விசாரணை ஏற்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் அறிவித்திருந்தது தெரிந்ததே

"1952-ம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டப்படி இந்த நீதி விசாரணை ஏற்படுத்தப்படுகிறது; இதற்கு நீதிபதி பி. எஸ் சோமசுந்தரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்"

என்று இன்று அரசிதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

மார்ச் 25-ந் தேதியும் 26-ந் தேதியும் பஸ் தொழிலாளருக்கும்—மாணவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாட்டின் தொடர்பாக எழுந்த நிகழ்ச்சிகள் பற்றி அவர் விசாரிப்பார்.

அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த சூழ்நிலை பற்றியும் அவர் விசாரிப்பார்.

[நீதிபதி பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள், மாவட்ட செஷன்சு நீதிபதியாக இருந்தவர்; தற்போது விடுமுறையில் இருந்து வருகிறார்.]

காங்கிரசார் வெளிநடப்பு!

சென்னை, மார்ச் 30—

இன்று சட்டமன்றத்தில் கேள்வி நேரம் முடிந்ததும், முதலமைச்சர் அண்ணா அவர்கள், அவையின் 82-வது விதியின்படி, கடந்த 25, 26-ம் நாட்களில் நகரில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டார்.

அதனையடுத்து எதிர்க் கட்சித்

(4-ம் பக்கம் பார்க்க)

சமூகவிரோதச் சக்திகளுக்குக் கருணாநிதி எச்சரிக்கை

'இந்த அரசைக் கவிழ்க்க முடியாது'

'தூண்டிவிடுவோர் கனவு நிச்சயம் பலிக்காது'

'உணர்ச்சிவயப்பட்டுள்ள மாணவச் சமுதாயம் உண்மை உணரட்டும்'

சென்னை, மார்ச் 30—

"மாணவர்களைத் தூண்டிவிடுவதன்மூலம் இந்த அரசைக் கவிழ்த்து விடலாம் என்ற கனவு நிச்சயம் பலிக்காது; எனவே, 'இந்த அரசு கவிழ்ந்துவிடுமோ' என எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை!

"தொழிலாளர்களும்—மாணவர்களும், இந்த அரசின் இரண்டு அங்கங்கள்; அந்த அங்கங்களுக்கு ஊறு ஏற்படும் வகையில் என்றும் இந்த அரசு நடக்காது; சமூக விரோதச் சக்திகளை இந்த அரசு கூர்ந்து கவனித்து வருகிறது; அவர்கள் நிச்சயம் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள்!

"நான் இராஜிநாமாச் செய்துவிட்டதாகக் கூறப்பட்டது; 'இராஜிநாமா நாடக'த்தை நடத்திக் காட்ட நான் விரும்பவில்லை—அவர்களுக்கே அது சொந்தமாக இருக்கட்டும்! தமிழ்ச் சமுதாயம் கட்டளையிடுமானால், நான் மட்டுமல்ல—இந்த அரசே இராஜிநாமாச் செய்யத் தயாராக இருக்கிறது!

"சென்ற திங்கள், இதே மன்றத்தில் இந்தி ஒழிப்புத் தீர்மானம் வந்தபோது, 'மாணவர்கள சொன்னதையெல்லாம் கேட்பதோ?' என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் கேட்ட நேரத்தில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சொன்ன பதில் இன்னும் நினைவில் நிற்கிறது—

"ஆம்; அவர்கள் சொன்னதைக் கேட்கத்தான் செய்வேன்; மாணவர்கள் என் இரத்தத்தோடு இரத்தமாக—சதையோடு சதையாக உள்ளவர்கள்"

என்று அண்ணா அவர்கள் கூறியதை, உணர்ச்சிவயப்பட்டிருக்கும் மாணவர்கள் இன்று மறந்திருந்தாலும் நாளை, அல்லது பிறகு உணருவார்கள்"

—என்று, பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இன்று சட்டமன்றத்தில், உருக்கத்தோடு குறிப்பிட்டார்.

இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புக் கோரிக்கையையடுத்து, அமைச்சர் கருணாநிதி அவர்கள் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

காங்கிரசார் தூண்டுதல்-கோதண்டராமன் குற்றச்சாட்டு

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், தமது ஒத்திவைப்புக் கோரிக்கையில்,

மாணவர்—தொழிலாளர் மோதலைப் பயன்படுத்திக் கொண்டு தீயசக்திகள், சமூக விரோதச் சக்திகளைத் தூண்டிவருவதாகவும், இந்த அரசைக் கவிழ்க்க இரு சாராரையும் தூண்டி வருவதாகவும், காங்கிரசுக் கட்சியினரே இதில் ஈடுபட்டுத் தங்கள் கட்சியின் ஐதராபாத் தீர்மானத்தை நிறைவேற்ற முனைந்துள்ளதாகவும், அமைச்சர் கருணாநிதி இராஜினாமா செய்துவிட்டதாகப் பத்திரிகையில் எழுதியும், தவறான பிரசாரம் செய்தும் வருவதாகவும், அமைதி நிலைநாட்ட அரசுடன் ஒத்துழைப்பதாகச் சட்டமன்றத்தில் கூறிவிட்டு வெளியே கலவரம் தொடர்ந்து நடக்க முயற்சி செய்வதாகவும் குற்றஞ்சாட்டி, 'இது பற்றி விவாதிப்பதற்காக அவையை ஒத்திவைக்க வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அவர், தமது ஒத்திவைப்புக் கோரிக்கையை வற்புறுத்தாது விட்டுவிட்டார்.

சிகிச்சை பெறுவோருக்கு

அண்ணா ஆறுதல்

சென்னை, மார்ச் 29—

நேற்று தாமும், சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் மருத்துவமனைக்குச் சென்று, அங்கு சிகிச்சை பெற்றுவரும் மாணவர்களையும், தொழிலாளர்களையும் சந்தித்து வந்ததாக முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

‘சமுதாயத்தில் எந்தப் பகுதியினரையும் அலட்சியப்படுத்தும் அரசு அல்ல இது’

பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்றும் நிலைபற்றி அண்ணா

சென்னை, மார்ச் 28—

“அரசுப் பொறுப்பேற்றதால் மட்டுமல்ல; என் பொதுவாழ்க்கையில், மாணவர்களின் முழு நம்பிக்கையையும், அன்பையும் ஒருசேரப் பெற்றவன் நான்! அதை நான் இழந்துவிட்டால்—மாணவர்கள் என்மீது அருவருப்புக் கொள்கிறார்களென்றால்—பொது வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட களங்கமாகவே அதை நான் கருதுவேன்!

“மாணவர்கள் என்மீது வைத்துள்ள மதிப்பை, மதிக்கமுடியாத கருவூலமாகக் கருதுகிற நான், அறிவீனத்தால் அந்த உள்ளுணர்வை—அன்பை இழந்துவிடுவேன் என்று கருதுவார்களானால், அது, தவறான ஒன்றாகும்.

“மாணவரிடையே அருவருப்போ, அச்ச உணர்ச்சியோ தோன்றியிருக்குமானால், அதை நீக்கிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். மாணவர் சமுதாயத்தைப் புறக்கணிக்கும் எண்ணம் ஒரு துளியும் இந்த அரசுக்கு வராது! எந்தச் சிறு பொறுப்பிலும், ‘தவறு செய்வேன்’ என்று, வாதத்திற்காகக்கூட எண்ணவேண்டாம்; அப்படி எண்ணுவதே எனக்கு, மிகுந்த வேதனையைத் தரும்!

“35 ஆண்டுக் காலமாக மக்களிடம் நெருக்கமான பழக்கம் கொண்டுள்ள நான், ‘எது வேண்டுமானாலும் ஏற்படட்டும்’ என்று இருந்துவிடமாட்டேன்! அப்படிப்பட்ட மனப்போக்கு இருந்திருந்தால், 35 ஆண்டுகளல்ல—35 நாட்கள்கூட, என்னால் பொதுவாழ்வில் நிலைத்திருக்க முடிந்திருக்காது!

“சமுதாயத்தில் எந்தப் பகுதியினரையும் அலட்சியப்படுத்திவிட்டு ஒரு அரசாங்கம் நீடித்து இருக்கமுடியாது—அரசாளும் கட்சியும் இருக்காது—அதன் தொண்டனும் இருக்க இயலாது!”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், நிதி ஒதுக்கீடு மசோதாமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெள்ளத் தெளிவுற அறிவித்தார். ‘மாணவர்கள்—பேருந்துத் தொழிலாளர் மோதுதலின்போது அரசு தன் கடமையைச் செய்யச் சிறிதேனும் தவறவில்லை’ என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும், ‘உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை’ எனக் கூறப்படுவதை மறுத்தும் மேலும் அவர் கூறியதாவது:—

பொறுப்புணர்வுடன் செயல்படும் நிலை!

“‘உரிய நேரத்தில்’ நடவடிக்கை எடுப்பதற்கும் இடையில், ஒரு மெல்லிய கோடுதான் எல்லையாக இருக்கிறது! எனவே, இந்த நிலைமைக்குள் அரசு, மிக்க பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டியிருக்கிறது! பல மாநிலங்களின் வாழ்வும் வீழ்ச்சியும், பல அமைச்சரவைகள் வாழ்ந்ததும் வீழ்ந்ததும் இதன் காரணமாகவே ஏற்பட்டன!

அரசின் செயலால் இந்நிலை ஏற்பட்டதா?

“குறிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று உண்டு; இதுவரையில் நடைபெற்ற எந்த ஆர்ப்பாட்டம்—கிளர்ச்சி—மோதுதல் ஆகியவை, அரசின் நடவடிக்கைக்கு எதிராக வந்தவைகளா என்றால், இல்லை! ‘அரசு ஒரு சட்டம் போட்டது; அதனை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது’—‘அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்தது; அதன் காரணமாக இந்தக் கிளர்ச்சி எழுந்தது’—என்ற நிலை இல்லை! சமூகத்தில் இரு சாராருக்கிடையே ஏற்பட்ட பகைமை உணர்ச்சிக் காரணமாகத்தான் ஆங்காங்கே இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டனவே தவிர, ‘அரசு செய்ததால் இந்த நிலைமை ஏற்பட்டது’ என்ற சொல் வராத அளவுக்குத்தான் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்பதை, அனைவரும் ஏற்றுக்கொள்வர் என நம்புகிறேன்.

அதைத் தவிர எனக்கு வேறென்ன வேலை?

“எந்த அரசும், ‘எது வந்தாலும் வரட்டும்’ என்று கைகட்டிக் கொண்டிருக்காது! தொழிலாளர்கள் பிரச்சினையானாலும்—மாணவர்கள் பிரச்சினையானாலும், ‘கிளர்ச்சி தோன்றும்’ என்ற அறிகுறிகள் தெரிந்தாலே, உடனே சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்துப் பேசி, ‘வன்முறை’கள் எதுவும் நடைபெறுவதற்குச் சந்தர்ப்பமே ஏற்படாதவாறு தடுப்பதற்கு முயற்சிகளை எடுத்திருக்கிறேன்.

“திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்—நிகழ்ச்சி நடைபெறுவது உடனுக்குடன் எனக்குத் தெரிவிக்கப்படுமானால், ஒவ்வொரு விவகாரத்தையும் தடுத்திடவும், பரிகாரம் கண்டிடவும், ஆறுதல் அளித்திடவும், நிலைமையைக் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் எடுத்துக்கொள்வேன். ‘கவனிக்கவில்லை’ என்ற நிலையே இல்லை—அதைத் தவிர எனக்கு வேறென்ன வேலை?

ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வோம்!

“‘மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை’ என்று சொல்வது தவறு; மாணவர் சமுதாயத்திடம் எப்போதும்போலவே எங்களுக்குப் பரிவு இருக்கிறது. ‘அவர்களுக்கு இடுக்கண் நேரிடாமல் தடுக்கவேண்டும்’ என்பதிலே நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

“பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய அனைத்தும் செய்யப்படும்; அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்புக்களை, அரசு ஈடு செய்யும்.”

‘இந்தியே இணைப்பு மொழி’ என்று நான் குறிப்பிடவில்லை

‘ஆங்கிலமே இருக்க வேண்டும்’ என்று வற்புறுத்தியிருக்கிறேன்

எதிர்க் கட்சியினர் கூற்றுக்கு அமைச்சர் நெடுஞ்செழியன் பதில்

சென்னை, மார்ச் 28—

“மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு அனுப்பினவத்த கல்வி பற்றிய கொள்கை விளக்க அறிக்கையில், ‘நூறாண்டுகளுக்குப் பிறகு இந்திதான் இணைப்பு மொழியாக வரும்’ யன்று குறிப்பிட்டிருக்கவில்லை; ‘ஆங்கிலம்தான் என்றென்றைக்கும் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்—இருக்க முடியும்’ என்று கூறி, அதற்கான காரணங்களையும் விளக்கிக்கொண்டே வரும்போது, ‘அப்படி இந்தி வருமானாலும், அதற்கு நூறு—இருநூறு ஆண்டுகள் ஆகும்; அதன் பிறகுதான் இணைப்பு மொழியாக வரமுடியும்’ என்று வாதத்துக்காகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும், ‘இணைப்பு மொழியாக உருவாவது என்பது வேறு—ஏற்றுக்கொள்வது என்பது வேறு’ என்பதை நமது முதலமைச்சர் அவர்கள்கூட விளக்கியிருக்கிறார்கள். இப்போது, அந்த அளவுக்குக்கூட முடியாது; அதாவது, ‘நூறு—இருநூறு ஆண்டுகள்கூடப் போதாது’ என்ற முடிவில்தான், இருமொழித் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்துள்ளோம்”

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றத்தில், எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திட்டவட்டமாக விளக்கினார்.

“‘நூறாண்டுக்குப் பிறகு இந்தி மட்டுமே இணைப்பு மொழியாக இருக்கும்’ என்று கல்வியமைச்சர், அந்த அறிக்கையில் குறிப்பிட்டு, அதில் கையெழுத்திட்டு அனுப்பியது உண்மையா?” என்பது ...ர் கருத்திருமன் கேள்வி...

தொழிலியற் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கும் முறை

தலைமை நீதிமன்றத் தீர்ப்பிற்கேற்ப நடவடிக்கை

சட்டமன்றக் கேள்விகளுக்கு அண்ணா—நெடுஞ்செழியன் பதில்

சென்னை, மார்ச் 28—

“மருத்துவம், பொறியியல், மற்றும் தொழிலியற் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் 1965—66-ம் ஆண்டுகளில் கடைபிடிக்கப்பட்ட கொள்கையையே இந்த அரசும் கடைபிடித்தது; தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 14 சதவிகித இடமும், பின்தங்கிய—மிகவும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு 25 சதவிகித இடமும் ஒதுக்கப்பட்டு முன்னேறிய வகுப்பு மாணவர்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்”

என்று சட்டமன்றத்தில், கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

“‘மாவட்ட வாரியாகப் பிரித்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைதான் கூடாது’ என்று இந்தியத் தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறதே தவிர, இடம் ஒதுக்குவது பற்றி ஒன்றும் கூறவில்லை” என்றும் அமைச்சர் ஒரு துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

“தலைமை நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறுபடாமலும், நமது நோக்கம் நிறைவேறும் வகையிலும், சட்டத்திற்குட்பட்டு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய அரசு ஆலோசித்துவருகிறது” என்றும் அவர் கூறினார்.

“கல்வித் துறையில் பின்தங்கியுள்ள பகுதிகள் இருந்துவருவதையும் மனத்தில் கொண்டுதான் பரவலாக எல்லோருக்கும் வாய்ப்பளிக்கும்வகையில், மாவட்டவாரியாக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் கொள்கை கடைபிடிக்கப்பட்டது; நீதிமன்றத் தீர்ப்பை மீறிப் புதிய சட்டம் எதுவும் இயற்ற முடியாது; எனினும், சட்டத்திற்குட்பட்டவகையில் நமது நோக்கம் நிறைவேற ஆவன செய்யப்படும்” என்றும் அமைச்சர் கூறினார். மேலும் துணை வினாக்களுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது;—

“தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய விகிதாசாரப்படி இடம் கிடைக்கவில்லை என்பது சரியல்ல; அப்படி எங்கேனும் இருக்குமானால், அவர்களிடமிருந்து தேவையான விண்ணப்பம் வரவில்லை என்பதுதான் காரணமாக இருக்கும்.

...தங்கிய வகுப்பினருக்கு’ என்றும், ‘மிகவும் பின்தங்கியவர்களுக்கு’ என்றும் தனித் தனியே இடம் ஒதுக்கமுடியாது. அந்த இரு வகுப்பினருக்கும் உரிய 25 சதவிகித இடங்களில், மிகவும் பின்தங்கியவர்களுக்கு முதற் சலுகை அளிக்கப்படும்.

பொறியியல் கல்லூரியில் 30 சதவிகித இடத்தைக் குறைக்க வேண்டும் என்பது இந்த மாநிலத்திதைப் பொறுத்து ஏற்படாது.”

முதலமைச்சர் அண்ணா (குறுக்கிட்டு கூறியதாவது):—“இந்த அரசைப் பொறுத்தவரையில் பொறியியல் கல்லூரி இடங்களைக் குறைக்கும் எண்ணம் இல்லை. இங்கு அதிக அளவில் பொறியர்களும், மருத்துவர்களும் தேவைப்படுகிறார்கள். ‘பல ஆண்டுகள் படித்து வேலை இல்லாமல் பலர் இருக்கிறார்கள்’ என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக்கப்பட்டு நிறைவேற்றப்படும்போது அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு ஏற்படும். ‘பொறியியல் கல்லூரிகளில் 30 சதவிகித இடங்களைக் குறைக்கலாம்’ என்பது மத்திய அரசின் திட்டமே தவிர, மாநில அரசின் திட்டமல்ல. நாம் அதனை ஒப்புக்கொள்ளவுமில்லை.”

ஜேம்ஸ்:—“பேட்டிக்கான மதிப்பு எண்கள் அதிகமாகவும், பரீட்சையில் பெறும் மதிப்பு எண்கள் குறைவாகவும் வைக்கப்பட்டுள்ளதால், பலருக்கு இடம் கிடைக்கவில்லை; எனவே, பேட்டி மதிப்பு எண்களைக் குறைக்கும் உத்தேசம் உண்டா?”

அமைச்சர் நெடுஞ்செழியன்:—“பாடத் தேர்வு மதிப்பு எண் 200 ஆகவும், பேட்டிக்கான மதிப்பு எண் 75 ஆகவும்தான் வைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் கூறுவதுபோல் பேட்டிக்கான மதிப்பு எண் கூடுதலாக வைக்கப்பட்டில்லை. பேட்டிக்கு வைக்கப்பட்டுள்ள 75 மதிப்பு எண்களையும் மூன்றாகப் பிரித்து, சார்ந்துள்ள சமுதாயத்தின் நிலை—விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியில் பெற்றுள்ள தேர்ச்சி—மாணவரின் மனநிலை முதலியவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு தான் மதிப்பிடுகிறார்கள்.”

அண்ணா:—“பேட்டிக்கான மதிப்பு எண்ணுக்கும்—பாடத் தேர்வுக்கான மதிப்பு எண்ணுக்கும் இடையே அதிகப் பாகுபாடு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் கூறினார்; இது, இந்த அரசு வந்தபின் ஏறுபட்டதல்ல—நெடுங்காலமாகவே இருந்து வந்த முறையாகும்.”

ஏ. எம். இராஜா:—“பேட்டிக்கான மதிப்பு எண்களை உயர்த்தும் உத்தேசம் உண்டா?”

அமைச்சர்:—“ஏற்கனவே 150 ஆக இருந்துதான் அதன்பின், படிப்படியாகக் குறைத்து இப்போது 75 ஆக உள்ளது.

சித்தன்:—“மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோயில் ஆகிய தாலுகாக்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகள்; அந்தப் பகுதிகளுக்காகிலும் சலுகை காட்டப்படுமா?’

அண்ணா:—“அதனால்தான், பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் கொள்கை அனுசரிக்கப்பட்டது; ஆனால், ‘இந்தப் பாகுபாடு காட்டககூடாது’ என நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.”

அமைச்சர் நெடுஞ்செழியன்:—“தனிச் சலுகை காட்டினால் நீதிமன்றத்தில நிற்குமா? எனவே, உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.”

இந்தியை விரும்பினால் காங்கிரசு ஆட்சி வரும்

வினாயகம் கேள்விக்கு அண்ணா பதில்

சென்னை, மார்ச் 28—

சட்டமன்றத்தில் இரு மொழித் திட்டம் குறித்த திரு. கே. வினாயகத்தின் துணைக் கேள்வி ஒன்றுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பதிலளிக்கையில் கூறியதாவது:—

“இரு மொழித் திட்டம் பற்றி நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்த கடிதத்துக்கு மத்திய அரசு பதில் எதுவும் எழுதவில்லை; கார

(4-ம் பக்கம் பார்க்க)

காதில் விழுந்தது!

"அரிசனச் சிறுவன் ஒருவன் உயிருடன் எரிக்கப்பட்டானே—அது, எந்த மாநிலத்தில் ?"

"ஆந்திராவில்."

"அங்கே ஆட்சியிலிருப்பது எந்தக் கட்சி ?"

"காங்கிரசு !"

"அரிசனப் பெண் ஒருவள், நடுத்தெருவில் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணக் கோலத்துடன் நடந்து செல்லுமாறு வைக்கப்பட்டாளே—அந்தச் சம்பவம் எங்கே நடந்தது ?"

"அவுரங்காபாத் என்ற நகரில்."

"அது இருப்பது எந்த ஆட்சியில் ?"

"காங்கிரசு நிர்வாகத்தில் !"

"மூன்ருவதாக இன்னென்று ; முகத்தில் வளர்ந்திருந்த மீசை, 'தாழ்வாக' இல்லாமல் மேல்நோக்கி முறுக்கிவிடப்பட்டிருந்தது என்பதற்காக மூன்று அரிசன இளைஞர்கள் மானபங்கப் படுத்தப்பட்டார்களே—அது எங்கே நடந்தது தெரியுமா ?"

"மத்தியப் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் !"

"இதெல்லாம், காமராசருக்குத் தெரியாமலா இருக்கும் ?"

"எதற்காகக் கேட்கிருய் ?"

"ஒன்றுமில்லை ; 'தமிழகத்தில், அரிசன மக்களின் நிலை, காந்தியடிகளின் ஆத்மா கண்ணீர் வடிக்கும் நிலைக்குத் தாழ்ந்துவிட்டது' என்று அவர் பேசியிருப்பதாகத் திருச்சி செய்தி ஒன்று பார்த்தேன் ; உடன், எனக்கு மேற்கண்ட செய்திகளெல்லாம் நினைவுக்கு வந்துவிட்டது !"

"அப்படியே அரிசன மக்களின் நிலை கவலைப்படத்தக்க அளவுக்குத் தாழ்ந்திருந்தாலும், அதற்குக் காரணம், அவரது கட்சிதானே ! 'இத்தனை ஆண்டுகள் நீங்கள் ஆண்டும் ஏன் சாதி வேற்றுமை முற்றிலும் அகலவில்லை' என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்ல வேண்டியது அவரது கட்சிதானே? முதலமைச்சராகவும் இங்கு இருந்திருக்கும் அவர்தானே அதற்குப் பொறுப்பு ?"

"நீ இப்படிச் சொல்கிருய் ; ஆனல் அவரோ, பிரச்சினையையே திசை திருப்புகிருர் ! இந்த ஓராண்டுக் காலத்தில்தான் தமிழ்நாட்டில் அரிசன மக்கள், சாதி வேற்றுமைக்கு அதிகம் ஆளாகிருர்களாம் !"

"இதயத்தையும் நாக்கையும் இயற்கை, மனிதனுக்கு வெவ்வேறு இடத்தில் வைத்துப் படைத்திருப்பதில் பொருள் இல்லாமல் இல்லை. 'நாக்கு எப்படியும் வளையும்' என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும் ? 'புசிப்பதற்கு மட்டும் நாக்கு பயன்படட்டும் என்று இருந்தால்கூடப் பரவாயில்லை' எனத் தோன்றுகிறது. ஏன், இப்படியெல்லாம் அபாண்டங்கள் பேசி அரசியல் வளர்க்கும் நிலைக்குக் காமராசர் வந்துவிட்டார் ? தி. மு. க.-வையா—அதன் ஆட்சியையா, 'சாதி வேற்றுமை வளர்க்கும் கட்சி' என்று கூறினர் ? சரியாகச் சொல்வதென்ருல் சாதி வேற்றுமையை ஒழிப்பதில் முழுக் கவனம் செலுத்தாமல் மட்டும் இருந்திருந்தால், அந்தக் கட்சி, என்றே இதைவிடப் பெரிய அமைப்பாக வளர்ந்திருக்குமே ! "நான் வேண்டுமானல், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒருவருடைய வீட்டில் சாப்பிடுகிறேன் ; 'அப்படிச் சாப்பிட முடியுமா ?' என்று எதிர்க்கட்சி வேட்பாளரையும் கேளுங்கள்" என்று இருபது—முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே தன்னேடு நகராட்சித் தேர்தலில் போட்டியிட்ட செங்கல்வராயனை, 'திண்டாட்ட'த்தில் விட்டவராயிற்றே—தி மு.க. தலைவர் அண்ணுதுரை !"

"தி.மு.க.-வினருக்குத் தனிப்பட்ட முறையில் சாதி வேற்றுமையில் நம்பிக்கை இருப்பதாகக் காமராசர் கூறவில்லை ; 'தி.மு க. ஆட்சியில்தான் சாதி வேற்றுமை உணர்ச்சி மீண்டும் தலைதூக்குவதாக'க் கூறியிருக்கிருர் !"

"அப்படியா ! அதற்கும் பதில் சொல்கிறேன் ; முதுகுளத்தூர் சம்பவம் நடந்ததே—அது எப்போது ? யாருடைய ஆட்சிக் காலத்தில் ?"

"காமராசர் காலத்தில்தான் ; இதற்கு மேல் அந்தப் பிரச்சினையைப் பற்றி விளக்கத் தேவையில்லை ; அவ்வளவுக்கு ஊரறிந்த விஷயம் அது ! அப்போது சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தாம் பேசுகையில், 'குழந்தைக்குப் பெயர் வையுங்கள்' எனத் தோழர் ஒருவர் கேட்டுக்கொண்டபோது, அண்ணுதுரை, என்ன பெயர் வைத்தார் தெரியுமா—இமானுவேல் ! தி. மு. கழகம், அதுபோது, யாருக்காக அனுதாபப்பட்டது என்பதற்கு இதுபோதும் என்று நினைக்கிறேன். ஆட்சிக்கு அவர்கள் இப்போது வந்துள்ள பிறகு அரிசன மக்களுக்குச் செய்துள்ள பாதகம் என்னவாம் ? சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கியிருப்பதுடன், கலப்புத் திருமணத்தையும் ஊக்குவித்துப் பரிசளிக்க முன்வந்திருப்பது காங்கிரசு ஆட்சியிலா ?"

"இல்லை ; இப்போதுதான்—கழக ஆட்சியில்தான் !"

"காமராசர் இப்படிப் பேசியதற்குக் காரணம்தான் என்னவாம் ?"

"சுருக்கமாகச் சொன்னல் — கிராமிய வழக்கில் கூறினல்—இது, சிண்டு முடிந்துவிடுகின்ற வேலை ! இவ்வளவு சிறிய தந்திரத்தில், பெரிய பதவி வகித்த ஒருவர் இறங்கக் கூடாது ! சாதி—மதம்—மொழி—வகுப்பு—போன்ற பிரிவுகள் மண்டிக்கிடக்கும் இந்தியா போன்ற நாட்டில், ஒரு சாராரிடையே சென்று, 'நீங்களெல்லாம் இப்படியா புறக்கணிக்கப்பட்டிருப்பது ? உங்களுக்கு இந்தக் கதியா ?' என்று பேசுவதுதான், இந்திய அரசியலில் சுலபமாக 'சக்தி'யைத் திரட்ட இருக்கும் குறுக்கு வழிச் சாதனம் ! காமராசர் இப்போது மீண்டும் அந்த வேலையில்......"

"அதென்ன—பொடிவைத்துப் பேசுகிருய் ? 'மீண்டும் அந்த வேலையில்...' என்ருல் ?"

"'பொடி' ஒன்றுமில்லை ; அதுவும் ஓர் உண்மைதான் ; தமிழக அரசியலை ஆரம்பமுதல் கவனித்துவருபவர்களைக் கேட்டுப் பார்—'காமராசர் முதன்முதல் எப்படிப் பதவிக்கு வந்தார்' என்று ! எனவே, 'மீண்டும் அந்த வேலையில் அவர் இறங்குகிருரோ' என்று யாராவது பொருள் கொண்டால், அப்படிப் பொருள் கொள்ளுபவர்கள்மீது கோபப்பட்டுப் பயனில்லை ; ஏனெனில், காமராசரின் பேச்சு அப்படித் 'தூண்டிவிடும்' தந்திரத்தைத்தான் கொண்டிருக்கிறது ! இல்லையென்ருல், சமுதாயச் சீர்திருத்தத்திலேயே கருவுற்று—பிறந்து—வளர்ந்து—இன்று ஆட்சிக்கும் வந்திருக்கும் தி. மு. க. ஆட்சியில், 'சாதி வேற்றுமை வளருகிறது' என்று பேசுவதற்குத் துணிவு வருமா ?"

—எஸ். ஆர்.

பர்மா அகதிகள் சொத்துக்கு நட்ட ஈடு

டில்லியின் முயற்சி என்ன என்பது தெரியவில்லை

சென்னை, மார்ச் 27—

"பர்மா அகதிகள், பர்மாவில் தாங்கள் விட்டுவந்த சொத்துக்களுக்குரிய நட்ட ஈடு பெறுவதற்கு மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது மாநில அரசுக்குத் தெரியாது ; 'இது சம்பந்தமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன' என்றுதான் மத்திய அரசு கூறுகிறதே தவிர, 'என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன' என்பது தெரியாது"

என்று, முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"பர்மா அகதிகளுக்கென்று மத்திய அரசு, மானியம் ஏதாவது தருகிறதா ?"

எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு முதலமைச்சர் கூறியதாவது :—

"மாநில அரசுக்குக் கொடுத்துள்ள கடனுக்குரிய வட்டியைப் பெறுவதில் மத்திய அரசு மிகுந்த அக்கறை காட்டுகிறதென்ருல், 'அவர்கள், மானியம் தரவில்லை' என்பது தெளிவாகும் ; ஆனல், மாநில அரசிடமிருந்து வட்டியைப் பெறுவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமான பிரச்சினை, பர்மா அகதிகள், பர்மாவில் விட்டுவிட்டு வந்த சொத்துக்களுக்குரிய நட்டஈட்டைப் பெறுவதுமாகும்."

அகதிகள் எவ்வளவுபேர்?

"பர்மாவிலிருந்து இதுவரையில், 96,503-பேர் அகதிகளாக வந்துள்ளனர் ; இவர்களில் 82,529 பேர் தமிழர்கள் ; இவர்களுக்கு செங்கற்பட்டு, இராமநாதபுரம், தென்னுற்காடு ஆகிய மாவட்டங்களில் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன."

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

ஏட்டிலிருப்பது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா ?

ஆராய்ந்த பின்னரே இனி ஆவன செய்ய தமிழக அரசு திட்டம்

சென்னை, மார்ச் 28—

"அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற வீட்டு மனைகள், சரியான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்துபார்க்க அரசு திட்டமிட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்ற மேலவையில், இறுதி துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"இதற்கு ஆதாரமாகப் புள்ளி விவரங்கள் இருக்கின்றன ; அரிசனங்களுக்காக 81,000 வீட்டு மனைகள் கையகப்படுத்தப்பட்டு, சுமார் 74,806 மனைகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன ; ஆனல், 41,137 மனைகளில்தான் வீடுகள் கட்டப்பட்டன.

"ஆகவே, அரிசனங்களுக்குப் புதிதாகக் குடியிருப்பு மனைகள் ஒதுக்க முனைவதற்கு முன்பு—ஏட்டில் இருப்பதுபோல்—அவர்களுக்குத் தரப்பட்டுள்ள மனைகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய அரசு திட்டமிட்டிருக்கிறது."

உண்மை நிலை அதுவல்ல !

"கிணறு, டிராக்டர்கள் முதலியவற்றிற்காகவும், பம்பு செட்டுகள், எஞ்சின்கள் ஆகியவற்றை வாங்கவும் அரசு கடனுகவும், மானியமாகவும் விவசாயிகளுக்கு அளிக்கும் திட்டங்களில் தொகைகள் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்ற குற்றச்சாட்டை மறுத்து முதல் அமைச்சர் கூறியதாவது :—

"வெளித் தோற்றத்திற்கு நிதி ஒதுக்கீடு குறைந்துள்ளதாகத் தோன்றும் ; உண்மை நிலை அதுவல்ல ; 'இன்ஸ்டிடுஷனல் பைனன்ஸ்' நிறுவனத்தின் மூலம் இவற்றிற்கு இந்த ஆண்டில் புதிதாக நாம் நிதி கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மேற்சொன்ன இனங்களுக்கு இப்போது அரசு ஒதுக்கியுள்ள தொகையுடன் இதையும் சேர்த்துக்கொண்டு பார்த்தால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நாம் அதிகமாகவே நிதி ஒதுக்கியிருப்பது தெரியவரும்."

நிதி வசதியை நிறுத்தியதேன் ?

குடிதண்ணீர் வசதிக்காக சென்னை மாநகராட்சிக்கு அளிக்கப்பட்ட நிதி இந்த ஆண்டு நிறுத்தப்பட்டுள்ளது ; காரணம், ரூ. 75 இலட்சம் கடன் எழுப்பிக்கொள்ள (குடிதண்ணீர் வசதிக்காக) மாநகராட்சிக்கு அரசாங்கம் அதிகாரம் அளித்துவிட்டதனல் இந்தத் தலைப்பில் இருந்த நிதி ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது."

இராசவாய்க்கால் பகுதி விவசாயிகள் மாநாடு

கரூரில் நடைபெற ஏற்பாடு

31—3—68 காலை 10-மணியளவில் பள்ளபாளையம் இராசவாய்க்கால் பகுதி விவசாயிகள் மாநாடு, கரூர் அஜந்தா திரைப்பட அரங்கில் நடைபெறும்.

மாநாட்டிற்கான ஏற்பாடுகளைக் கரூர் வட்ட செயலாளர் தோழர் ஆர். என். இராமசாமி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத் துணைத்தலைவர் தோழர் எம். பெரியசாமி ஆகியோர் செய்து வருகின்றனர்.

வாய்க்கால் திட்டம் கடந்த மூன்று பொதுத்தேர்தலின்போதும் காங்கிரசுக்காரர்களால் வாக்குறுதி கொடுக்கப்பட்டு கரூர் தொகுதியில் அது முக்கியத் தேர்தல் பிரச்சினையாகக் கையாளப்பட்டு வந்தது ; ஆனல் திட்டம் நடைபெறவில்லை.

இன்று நமது கழக அரசு இத்திட்டத்திற்காக இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. திட்ட வேலைகளில் விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெறவே மாநாடு கூட்டப்படுகிறது.

அணைக்கட்டுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

அமைச்சர்களைச் சந்திக்க ஏற்பாடு

தமிழக அணைக்கட்டுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் எம். ஏ. ரசீது அவர்கள் தலைமையில் தூதுக்குழு ஒன்றைச் சென்னைக்கு அனுப்பி, முதலமைச்சர் அண்ணு, தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்ட அமைச்சர் செ. மாதவன் ஆகியோரையும், மற்றும் தமிழக மின்சார வாரிய உறுப்பினர்களையும், தலைவரையும சந்தித்து, பரம்பிக்குளம் – ஆளியாறு திட்டத்தில் பணிபுரியும் நாட் கூலித் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைநிறுத்த அறிவிப்பைத் திரும்பப் பெறச் செய்யவும், அணைக்கட்டு பகுதியில் வேலை முடிவுறும் தருவாயிலிருப்பதால் அவர்களுக்கு மாற்று வேலை கோரியும், இன்னும் பல கோரிக்கைகளைத் தெரிவிக்கவும் செய்வதென்று கடந்த 16—3—68-ல் நடந்த தமிழக அணைக்கட்டுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இடுக்கி திட்டத்துக்கு இக்கட்டு நிலை

கேரள அரசுக்குக்

கனடா தூதுவரக வருத்தக் குறிப்பு

தொழில் அமைதியின்மையால் மாநிலம் பெறும் புதிய அனுபவம்

'இதுவரையில் இல்லாத முறை' என்று கூறப்படும்வகையில், புதுடில்லியிலுள்ள கனடா நாட்டுத் தூதுவரகம், கேரள மாநில அரசுக்கு வருத்தம் கலந்த எச்சரிக்கைக் குறிப்பு ஒன்றினை, தந்தி மூலம் அனுப்பியிருப்பது, அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது !

ரூ. 70-கோடி செலவில் நிறுவப்பட்டுவரும் இடுக்கி நீர் மின்சாரத் திட்டம், கனடா நாட்டின் உதவியுடன் நடைபெறுவதாகும்.

"கடந்த சில நாட்களாக அங்கு நிலவிவரும் வேலைநிறுத்தம்—அமைதியின்மை காரணமாக மூண்டிருக்கும் அஞ்சத்தக்க போக்கினை உடனடியாக மாநில அரசு நீக்கவில்லையென்ருல், திட்டத்திலிருந்தே விலகிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்ற ஒரு உச்சக் கட்ட எச்சரிக்கையை, கனடா நாட்டுத் தூதுவரகம் கேரள அரசுக்கு அனுப்பியிருக்கிறது !

நிறுவனத்தில் பணியாற்றும் காண்டிராக்ட் ஊழியர் ஒருவர், திட்டத்துக்கு மின்சார விநியோகம் செய்துவரும் இலாகா ஊழியர் ஒருவரைத் தாக்கியதையொட்டி, மின்சார ஊழியர்கள் வேலைநிறுத்தம்—கலவரம் போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளதால், திட்டப் பகுதி முழுவதும் தேக்க நிலை பெற்றிருப்பதுடன், பயங்கரச் சூழ்நிலையிலும் இருந்துவருவதாகத் தெரிகிறது.

திட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்த 47 பொறியியல் வல்லுநர்கள், தொழிலாளர்களின் மிரட்டலுக்கு அஞ்சி, இடுக்கியை விட்டு வெளியேறியிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

ரூ. 70 கோடி மூலதனம் கொண்ட இத்திட்டம், இப்போதைய நிறுவன வேலைகளின் மூலமாக மட்டும் கேரள மின்சார இலாகாவுக்கு நாளொன்றுக்கு மூன்று இலட்ச ரூபாய் வருவாயைக் கொடுத்துக்கொண்டிருந்தது ; திட்டம் முழுமை பெற்ருல், ரூ. 200 கோடி பெறுமான துணைப் பொருட்கள் உற்பத்திக்கான வழிவகைகளும் இப்போதே செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

'கேரள மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஓர் ஏணி' என்று கருதப்பட்ட இத்திட்டத்தில், இப்போது ஐயப்பாடும், அமைதியின்மையும் நிலவிவருவது பற்றிச் சட்டமன்றத்தில், கவனஈர்ப்புத் தீர்மானமும், அதையொட்டி அமைச்சரின் விளக்கமும் தரபபட்டிருக்கிறது.

நிதானம் காப்பீர்— நடுநிலை காட்டுவீர்!

முதலும் முடிவும் இல்லாதது, வதந்தி!

கொதிப்பு நிலை, பீதிகளுக்குத்தான் வழிவகுக்கும்!

கொதிப்பின் மத்தியில் எந்த ஒரு பக்கத்துக்கும் காட்டும் ஒருதலையான ஆதரவோ, அனுசரணையோ, அமைதிக்கு வழி கோலாது!

ஒரு நிலை காட்டுவதும், நிதானம் காப்பதும்தான், அமைதிச் சூழலை விரைந்து ஏற்படுத்தும்!

யூகங்கள் – பிறர் வாய்மொழிகள், கொதிப்பு நிலையில் பெரும்பாலும் அடிப்படையற்றதாகவே இருக்கும்!

பிரச்சினைகளுக்கு வழிவகைகள் காண ஒரு முனையில் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, மறு முனையில், 'ஒன்று போய் மற்றொன்று' என்ற வகையில் மேலும் பல வளருவது, பொது நன்மைக்குப் பாதகம் விளைவிப்பதாகும்!

நேற்றைய ஆங்கில நாளேடு ஒன்றில்—'ஆசிரியர் கடிதப் பகுதி'யில்—வாசகர் ஒருவர் தெரிவித்துள்ள கருத்துப்படி, தனிப்பட்ட இருவர் அல்லது சிலரிடையே நடந்த சாதாரணச் சம்பவம், 'இத்துணை பெரிய பிரச்சினையாக வளர்ந்திருப்பது - வளர்ப்பது சரியா, முறையா?' என்று நம்மை நாமே கேட்டுகொள்வதில், ஒவ்வொருவருக்கும் கடமையுண்டு – பங்கு உண்டு!

அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் விளக்கியவாறு, இந்தப் பிரச்சினையின் ஆரம்பம், 'அரசாங்கத்துக்கு எதிரான ஒன்று' என்ற வகையில் துவங்கப்பட்டதல்ல!

தனிப்பட்ட ஒவ்வொருவரும் இன்னும் சில நாட்கள் கழித்துத் தங்களுக்குள் சிந்தித்துப் பார்த்தாலும், 'அந்த ஒரு நிகழ்ச்சியா இப்படி....?' என்று நாணம் கொள்ளும் அளவுக்கு இருப்பதனை உணருவர்!

பிரச்சினைகளின் வளர்ச்சிகளினால் உணர்ச்சிவயப்படுதல் இயற்கை; ஆனால், அதன் மத்தியில் இருந்து எடுக்கப்படும் முடிவுகள், 'உறுதி' – 'இறுக்கம்' என்ற தற்காலிகக் கவர்ச்சிக்குச் சிக்கி பலியாகிவிடக்கூடாது!

வதந்தி என்னும் வாகனத்துக்கு, ஓட்டுபவரே யாரென்று தெரியாது; ஆனால், 'பயணம்' மட்டும் வேகமாக இருக்கும்!

உணர்ச்சிவயப்பட்ட தன்மைக்கு மேலும் ஊட்டம் தருவது, வதந்தி – யூகம் ஆகிய இரண்டும்!

வியர்த்த நிலையில் குளிப்பதற்கு வெந்நீர் தேவையற்றது! குளிர் நீரோ பகையாக முடியும்!

வியர்வை அடங்கிக் குளிப்பதுதான், உடலுக்குக் கேடு பயக்காதது!

பதைபதைப்பு—படபடப்பு இரண்டுக்கும் இடையில் அமைதி கிடைக்காதது மட்டுமல்ல – அது மேலும் கெடுவதற்குத்தான் வழி பிறக்கும்!

இதற்கிடையில், வதந்திகள் வேறு புகுந்தாலோ, வீண் வம்புகள் இறக்கை இல்லாமலே பறக்கும்!

நீரைக் குழப்பிக்கொண்டு, தவறவிட்ட பொருளைத் தேடுவதில் பயனில்லை! 'நானும் தேடுகிறேன்' என்று வரும் சிலர், நீரைக் குழப்பித் தேடும் தொழிலைத்தான் நீட்டிப்பார்களே தவிர, பொருளைக் கண்டெடுக்கும் அடிப்படை முயற்சிக்கு உறுதுணையாக இருக்கமாட்டார்கள்!

அனைவரும் காட்டும் நிதானம்—எல்லோரும் கடைபிடிக்கும் நடுநிலை இரண்டும் இருந்தால் மட்டும் போதும்!

ஆக்கபூர்வமான அரசின் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருக்கக்கூடியவைகள் இவைதான்!

கால்கோள் விழா

காட்டுப்பாடி வட்டார சீரணியினரால் கட்டப்படவிருக்கும் பிரம்மபுரம் ஊராட்சி ஒன்றிய முதுநிலை ஆதாரப் பள்ளிக் கட்டிடக் கால்கோள் விழா, 31—3—68 காலை 5-30 மணிக்கு, திரு. கோ. நடராசன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; கால்கோள் துவக்கம்; பி. கே. முனுசாமி; வரவேற்பு: கே. வேணுகோபாலன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

சென்னை 68-வது வட்ட

சீரணித் தோழர்களுக்கு:

"31—3—68 காலை 8-மணியளவில், தோழர் து. சீனிவாசன் வரவேற்புக்கு பின், திரு. எம். நாகூர்மீரான் எம்.சி. தலைமையில்—திரு. தா. பரமானந்தம் முன்னிலையில், எழும்பூர்—வரதராசபுரம் சாலை துப்புரவு வேலை துவங்கப்படும்; சீரணித் தோழர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று எழும்பூர் பகுதி சீரணித் தலைவர் சோ. மா. இராமச்சந்திரன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

31–3–68

செங்கற்பட்டு

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு மேலமையூர் ஐயங்குளம் திடலில்; தலைவர்: செ.சு. சுந்தரம்; பேசுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., வெ. கண்ணன், புலவர் முருகையன் எம்.எல்.ஏ., செல்வி கஸ்தூரி பி.எஸ்சி., பி.எல்., செ.கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., செ.எ. பலராமன், ஏ.ஆர். அன்சர் எம்.சி., வ. பசுபதி எம்.சி., கோ. ஆலாலசுந்தரம், செ.மு. தட்சணாமூர்த்தி, டி.எஸ். தணிகைவேலு, அ. பால்ராஜி.

திருக்கழுக்குன்றம்

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா நூல் நிலையம் அருகில்; தலைவர்: எம்.எஸ்.ஏ. வகாப்; பேசுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., வெ. கண்ணன், புலவர் முருகையன் எம்.எல் ஏ., கஸ்தூரி பி.எஸ்சி., பி.எல்., செ. கோ. விசுவநாதன், செ.எ. பலராமன், சு. குருநாதன், ம. நடராசன், தி.அ. சண்முகம், அன்பு குருசாமி.

கடலூர்

அரசினர் கலைக் கல்லூரி தி.மா.மு.க. துவக்கவிழா; மாலை 6 மணிக்கு மஞ்சை நகர் மைதானத்தில்; வரவேற்பு: எஸ்.டி. இராசேந்திரன்; தலைவர்: கோ. பழனிசாமி; துவக்குபவர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., வெ. கிருட்டினமூர்த்தி எம்.பி., கி. கோவிந்தராசன், செயராமன், கணேசன், நடராசன், அ. புருடோத்தமன்.

அலிவலம்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா படிப்பகத்திற்கு அருகில்; தலைவர்: செ. மாரியப்பன்; பேசுவோர்: கீ. வீரமணி எம்.ஏ.,பி.எல்., என்.எஸ். இளங்கோ, ஆர்.இராசகோபால், எஸ். சிவசங்கரன், டாக்டர் ஆர். விசயராகவன், சு.தென்கோவன், அ.பெ. பால்ராசு.

சென்னை

தோழமைக் கட்சிகள் இணைப்புக் குழுச் சார்பில் மத்திய அரசு 'பட்ஜெட்' கண்டன நாள் பொதுக்கூட்டம்; மாலை 6-30 மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ண செட்டித் தெருவில்; தலைவர்: ம.பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. (தமிழரசுக் கழகம்); பேசுவோர்: என்.வி. நடராசன் எம்.எல்.சி. (தி.மு.க.), என். சங்கரய்யா எம்.எல்.ஏ. (மார்க்சிஸ்ட் கம்யூ.), தா. பாண்டியன் எம்.ஏ., பி.எல். (இந்திய கம்யூ. கட்சி), ஆர். வாசுதேவன் (ச.சோ.)

சங்கரன்கோயில்

மறுமலர்ச்சி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு வணிக வைசிக சங்கத் திடலில்; தலைவர்: க. சுப்பையா; பேசுவோர்: கவிஞர் விசுவபாரதி, அ. பழனிச்சாமி பி.காம்., மற்றும் பலர்.

1–4–68

குறிச்சிக்கோட்டை

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: வ.சு. நடராசு; பேசுவோர்: குன்னத்தூர் க. அன்பரசு, ஏ.எஸ். மணி, மா. சேரன், பருவத கண்ணன், தி. கஞ்சி மலையப்பன்.

மணமேல்குடி

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: நா. பழனிசாமி; பேசுவோர்: ஒ.பி. இராமன் எம்.எல்.ஏ., ஆ. துரையரசன் எம்.எல்.ஏ., ஒவியர் கருணா, மணலூர் இராமநாதன்.

மாநிலங்களவைத் தேர்தல்

தில்லை வில்லாளன், அப்பன் வெற்றி

தோழமைக் கட்சித் தோழர்கள் தேர்வு

சென்னை, மார்ச் 28—

நாடாளுமன்ற மேலவைக்குத் தமிழகத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களுக்கான தேர்தல் வாக்குப் பதிவு இன்று நடைபெற்று முடிவு அறிவிக்கப்பட்டது; தி. மு. கழக வேட்பாளர்களான திரு. தில்லை வில்லாளன் அவர்களும், திரு. ஜி. ஏ. அப்பன் அவர்களும் வெற்றிபெற்றனர்.

தில்லை வில்லாளன்

மற்றும், தோழமைக் கட்சி வேட்பாளர்கள் அனைவரும்வெற்றி பெற்றதுடன், காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிட்ட கே. எஸ். இராமசாமியும் வெற்றி பெற்றார்.

மாநிலங்களவைக்கு 6 போகளைத் தேர்ந்தெடுக்க சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கும் இந்தத் தேர்தலில் 7 பேர் போட்டியிட்டனர்; இவர்களில், சுயேச்சையாகப் போட்டியிட்ட சிவசண்முகம் பிள்ளை தவிர, மற்றவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம்:—

தில்லை வில்லாளன் (தி.மு.க.)
ஜி ஏ. அப்பன் (தி.மு க.)
கே.எஸ் இராமசாமி (காங்கிரசு)
எம். ஆர். வெங்கட்ராமன் (இடது கம்யூ.)
எம். இரத்தினசாமி (சுதந்தரா)
காஜா மொகிதீன் (முஸ்லிம் லீக்)

ஜி. ஏ. அப்பன்

இந்திக் கட்டளைச் சொற்கள்— அறிஞர் அண்ணா விளக்கம்

சென்னை, மார்ச் 28—

"தேசிய மாணவர் படையில் இந்திக் கட்டளைச் சொற்களை நீக்க மத்திய அமைச்சர் மறுத்துவிட்டதாகப் பத்திரிகையில் வந்த செய்தியைவைத்து உறுப்பினர்கள் இங்கு கேள்வி கேட்கிறார்கள்; நான் அதுபற்றி ஒரு தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன்; நாம் டெல்லிக்கு அது குறித்து எழுதிய கடிதத்திற்குப் பதில் வந்திருக்கிறது—

"கட்டளைச் சொற்கள் எல்லாமே இந்தியில் இல்லை; ஒரு பத்து – பதினைந்து சொற்கள்தாம் இந்தியில் உள்ளன; மற்றவையெல்லாம் ஆங்கிலத்தில் தான் உள்ளன; எனவே மறு பரிசீலனை செய்து உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்"

என்றுதான் அந்தக் கடிதத்தில் அவர்கள் எழுதியுள்ளார்கள்" என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்கள்.

இந்தியை விரும்பினால்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம், கல்வி, மாநில அரசைப் பொறுத்த பிரச்சினை என்பதுதான்.

"'ஒரு குறிப்பிட்ட அளவு மாணவர்கள் விரும்பினால் இந்தியைக் கற்கத் தமிழ்ப் பள்ளிகளில் வசதியளிக்கப்படுமா' என்று நண்பர் விநாயகம் கேட்கிறார்; 'நாங்கள் இந்தி படிக்க விரும்புகிறோம்' என்று மாணவர்கள் கூறுகிற அந்த நிலை வளர்ந்தால், காங்கிரசு அரசு வரும்; அப்போது அவர்கள் அதற்கு வேண்டியதைச் செய்வார்கள். (சிரிப்பு)

இந்தப் பதிலைக் கேட்டதும் எதிர்க் கட்சியினர் ஏதோ கூறினர்; அதற்கு அண்ணா அவர்கள் பதிலளிக்கும் வகையில் கூறியதாவது:—

"நான் 15—20 ஆண்டுக்காலம் காங்கிரசு ஆட்சியின்கீழ் இருந்திருக்கிறேன்; இனியும் இருப்ப

காங்கிரசார் வெளிநடப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்து, நீதி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதியை ஏற்றுக்கொள்வதற்கில்லையென்றும், வெளி மாநிலத்திலிருந்து ஒரு நீதிபதியை வரவழைக்க வேண்டுமென்றும், இப்போது நடந்துள்ள சம்பவங்கள் மட்டுமன்றி, கடந்த ஓராண்டுக் காலமாகவே, மாணவர்களுக்கும்—பஸ் தொ ளர்களுக்குமிடையே ந துள்ள தகராறுகள் பற்றியு விசாரணை நடத்தவேண்டும் என்றும், மாணவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப் வில்லை என்றும், சட்டம உறுப்பினர்கள் எல்லோரு இன்னும் ஒரு வார கால சென்னை நகரில் தங்கியிருந்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றி ஆவன செய்யும் வகையில் சட்டமன்றக் கூட்டம் மேலும் ஒரு வார காலத்துக்கு நீட்டிக்கப்பட வேண்டுமென்றும் கூறி, 'முதலமைச்சரின் அறிக்கையில் நாங்கள் மன நிறைவுகொள்ளவில்லை' என்பதாகக் கூறிவிட்டு தம் கட்சியினரோடு வெளிநடப்புச் செய்தார்.

பின்னர், தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

இயந்திரச் செங்கல் தொழிற்சாலைத் திறப்பு விழா

திருமழிசையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள தமிழக அரசு தொழில் வாணிகத் துறையின் இயந்திரச் செங்கல் தொழிற்சாலைத் திறப்பு விழா, 31—3—68 மாலை 6-மணியளவில் நடைபெறும்; முதலமைச்சர் அண்ணா அவர்கள் தொழிற்சாலையைத் துவக்கிவைப்பார்: தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்குவார்.

தில் ஒன்றும் தவறில்லை; எனவே, இதைச் சொல்ல நான் ஒன்றும் கூச்சப்படவில்லை." (சிரிப்பு)